# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 09/மா/2025**

**நாள்: 30.03.2026**

கோ. கோவிந்தராஜ்
சென்னை–83 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–10
பெருநகர சென்னை மாநகராட்சி

(2) கட்டிட உரிமையாளர்
7, பிருந்தாவன் தெரு
மேற்கு மாம்பலம், சென்னை–33

(3) கட்டிட உரிமையாளர்
26/47 பிருந்தாவன் தெரு விரிவு
மேற்கு மாம்பலம், சென்னை–33 --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 06.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.11.2024 அன்று பெறப்பட்டு 09/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 06.11.2024 நாளிட்ட மனுவுடன் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முகவரியிட்ட 05.03.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> “கதவு எண் 7, பிருந்தாவனம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–33 என்ற முகவரியிலும், கதவு எண் 26/47, எண் 44 பிருந்தாவனம் தெரு விரிவு, மேற்கு மாம்பலம், சென்னை–33 என்ற இரு முகவரிகளிலும் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதை மற்றும் மழைநீர் கால்வாய்களை ஆக்கிரமித்து 3 அடி உயரம் 15 அடி அகலம் 50 அடி நீளத்தில் படிக்கட்டுகள் கட்டியிருப்பதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். ஆக்கிரமிப்புகளை அகற்றி புகைப்பட ஆதாரங்களுடன் ஜப்தி நடவடிக்கை எடுத்து பதில் அளிக்கவும்.”

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 13.01.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.02.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் செயற்பொறியாளர் தனது 04.02.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

> "திரு. கோவிந்தராஜ் என்பவரின் 06.11.2024 நாளிட்ட முறையீட்டு மனு சம்பந்தமான விசாரணை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.02.2026 அன்று நடைபெற உள்ளது. எனவே, விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் விளக்கம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
>
> மேற்கண்ட இரண்டு கட்டிடங்கள், நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாயினை ஆக்கிரமித்து படிக்கட்டுகள் கட்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்பட்டது.
>
> இதுகுறித்து தெரிவிப்பது யாதெனில், மேற்கண்ட புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள இரண்டு கட்டிடங்களின் முன்புறம் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாயினை ஆக்கிரமித்து கட்டப்பட்ட படிக்கட்டுகள் மற்றும் சாய்வு தளம் ஆகியவை பணியாளர்களால் அகற்றப்பட்டது என்பதும், அதற்குண்டான புகைப்பட ஆதாரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதும் தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

5. மனுதாரர் தனது 02.02.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

> "முறையீட்டு மனு எண் 10/மா/2025 வருகின்ற 06.02.2026 அன்று தங்கள் விசாரிக்க அளிக்கப்பட்ட சம்மன் இம்மனுவுடன் இணைப்பு.
>
> Case 2, மனு எண் 09/மா/2025 வருகின்ற 06.02.2026 அன்று மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் நேரடியாக விசாரிக்க அனுப்பப்பட்ட சம்மன்கள் இம்மனுவுடன் இணைப்பு. இதுவரை ஆக்கிரமிப்புகளை அகற்றவில்லை. வருகின்ற 13.02.2026 அன்று எனது மகளுக்கு திருமணம் நிகழ்ச்சி உள்ளதால் நான் பத்திரிக்கை கொடுக்கும் பணிகளாலும் திருமண ஏற்பாடுகள் செய்து வருவதாலும் 06.02.2026 அன்று நேரடியான விசாரணைக்கு வரமுடியாத நிலை உள்ளதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஐயா, அவர்கள் ஏற்றுக் கொண்டு அடுத்த மாதம் ஏதேனும் ஒரு தேதியில் விசாரணைக்கு ஆஜராக அழைப்பாணைகள் அளிக்கும்படி தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

6. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் 06.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> "மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள இரண்டு கட்டிடங்களும் கள ஆய்வு செய்யப்பட்டன. கள ஆய்வில், இரண்டு கட்டிடங்களின் முன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சாலையின் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாயினை ஆக்கிரமித்து படிக்கட்டுகள் கட்டியிருப்பது கண்டறியப்பட்டு, ஆக்கிரமிப்புகள் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளார்களால் அகற்றப்பட்டன என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட புகைப்பட நகல்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன்."

7. இரண்டாம் மற்றும் மூன்றாம் எதிர்மனுதாரர்களான கட்டிட உரிமையாளர்களை 06.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகுமாறு அனுப்பப்பட்ட அழைப்பாணைகள் சம்பந்தப்பட்ட எதிர்மனுதாரர்கள் பெறாமல் இம்முறைமன்ற நடுவத்திற்கே திருப்பப்பட்டுள்ளன.

8. மனுதாரர் தனது குடும்ப நிகழ்ச்சி காரணமாக 06.02.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு கலந்து கொள்ள இயலாது என்று தெரிவித்தன் காரணமாக, மனுதாரர் 06.11.2024 நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக மனுதாரருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.03.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.02.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு நகல் அனுப்பப்பட்டது.

9. மனுதாரர் 06.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> "சென்னை–33, மேற்கு மாம்பலம், பிருந்தாவனம் தெரு, கதவு எண் 7, மற்றும் 26/47–ல் அமைந்துள்ள வீடுகளின்முன் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமித்து படிகட்டுகள் கட்டப்பட்டு இருந்தது. தற்பொழுது மாநகராட்சியால் ஆக்கிரமிப்பு சிறிது அகற்றப்பட்ட போதிலும் முழுவதுமாக அகற்றாமல் அரைகுறையாக ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. இதனால் தற்போது கூட பொதுமக்கள் நடுரோட்டில் நடக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, இந்த ஆக்கிரமிப்பினை முழுவதுமாக அகற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

10. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் 06.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> "06.02.2026 அன்றைய விசாரணையில் அளித்த வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக, இன்று (06.03.2026) நடைபெற்ற விசாரணையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துக் கொள்கிறேன்.
>
> மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள இரண்டு கட்டிடங்களின் முன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சாலையின் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாயினை ஆக்கிரமித்து கட்டப்பட்ட படிக்கட்டுகள் அகற்றப்பட்டுள்ளது. மனுதாரர் தற்போது தெரிவித்துள்ள மீதமுள்ள ஆக்கிரமிப்பும் விரைவில் அகற்றப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

11. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், முதல் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

> சென்னை–33, மேற்கு மாம்பலம், பிருந்தாவனம் தெரு, கதவு எண் 7 மற்றும் 26/47–ல் அமைந்துள்ள வீடுகளின் முன் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதையை ஆக்கிரமித்து படிகட்டுகள் கட்டப்பட்டு இருந்ததை. தனது புகாரின் அடிப்படையில் மாநகராட்சியால் ஆக்கிரமிப்பு சிறிது அகற்றப்பட்ட போதிலும் முழுவதுமாக அகற்றாமல் அரைகுறையாக ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளதால், அவ்வாக்கிரமிப்பினை முழுவதுமாக அகற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.
>
> மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை–33, மேற்கு மாம்பலம், பிருந்தாவனம் தெரு, கதவு எண் 7 மற்றும் 26/47–ல் அமைந்துள்ள இரண்டு கட்டிடங்களையும் கள ஆய்வு செய்யப்பட்டதில், அக்கட்டிடங்களின் முன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சாலையின் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாயினை ஆக்கிரமித்து படிக்கட்டுகள் கட்டியிருப்பது கண்டறியப்பட்டு, அவ்வாக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டது

என்பதும், மீதமுள்ள ஆக்கிரமிப்பும் விரைவில் அகற்றப்படும் என்பதும், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை–33, மேற்கு மாம்பலம், பிருந்தாவனம் தெரு, கதவு எண் 7 மற்றும் பிருந்தாவனம் தெரு விரிவு, கதவு எண் 26/47 என்ற முகவரிகளில் அமைந்துள்ள இரண்டு கட்டிடங்களின் முன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சாலையின் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாயினை ஆக்கிரமித்து கட்டப்பட்ட படிக்கட்டுகளை அகற்றப்பட்ட போதும், மீதமுள்ள ஆக்கிரமிப்புகளையும் விரைவில் அகற்றப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரை அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு.கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு, அசோக் நகர்,
சென்னை–600 083.

(2) ஆணையர்,பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி, 117, என்.எஸ்.கே. சாலை,
கோடம்பாக்கம்,சென்னை–600 024.

(4) கட்டிட உரிமையாளர்,
எண் 7, பிருந்தாவனம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033.

(5) கட்டிட உரிமையாளர்,
26/47, பிருந்தாவனம் தெரு விரிவு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033.

(6) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032